(ஆ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''இன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற டாக்டர் தே. குமாரதாஸ், எம்.எல்.ஏ., அவர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-இன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் இல்லை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளைச் சட்டமன்றப் பேரவை விதி 229(ஈ)-இன்படிஇப் பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.